

தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் புதிதாக இரண்டு வாகன ஓட்டுநர்கள் கருணை அடிப்படையில் ஒரு வாகன சீராளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் எஸ். செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் நடுகுத்தகை ஊராட்சியில் பேரறிஞர் அண்ணா தந்தை பெரியார் பிறந்த நாள் மற்றும் திமுக பவள விழாவை முன்னிட்டு ஒன்றிய கழகச் செயலாளர் டி.தேசிங்கு ஏற்பாட்டில் முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு முதியோர்களுக்கு பிரியாணி வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜ், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் பகுதி கழகச் செயலாளர் ஜி.நாராயண பிரசாத், பொன் விஜயன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், ஒன்றிய கவுன்சிலர் நெமிலி சுரேஷ்குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பெ.வினோத்குமார், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி , கு.தமிழ்ச்செல்வி, என்.லட்சுமி, பா.கந்தன், கட்டதொட்டி குணசேகரன் உதயா, இ.வி.பி.பிரதிப், ஜி.பிரவின் குமார், இ.ஏ.சந்திரன், ஹரி, உள்பட பலர் உள்ளனர்.

### சிறுகதை மன்னன்

# எஸ்.எஸ்.தென்னரசு மனைவி ஜாக்குலின் மறைவு!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – கே.ஆர்.பெரியகருப்பன் – பி.மூர்த்தி மற்றும் கழக முன்னணியினர் அஞ்சலி!

மதுரை, செப். 19-

சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு துணைவியார் ஜாக்லின் தென்னரசு மறைவு! அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரிய கருப்பன், பி.மூர்த்தி, மொடக்குறிச்சி சுப்புலட்சுமி, தமிழச்சி தங்கபாண்டியன், வ.வேலுசாமி, பெ குழந்தைவேலு கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தனர்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் சிறுகதை மன்னன் என பாராட்டு பெற்ற எஸ்.எஸ். தென்னரசு துணைவியார் ஜாக்குலின் தென்னரசு இயற்கை எய்தியதை தொடர்ந்து மதுரையில் உள்ள அன்னாரின் இல்லத்திற்கு நேரில் சென்ற அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரிய கருப்பன், பி.மூர்த்தி, முன்னாள் அமைச்சர் மொடக்குறிச்சி சுப்பு லட்சுமி, தமிழச்சி தங்கபாண்டியன், வ.வேலு சாமி, பெ.குழந்தைவேலு மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.

அதன் விபரம்

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் சிறுகதை மன்னன் என பாராட்டு பெற்றவரும், கழகப் பணியில் பெரும் தொண்டாற்றியவருமான எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் துணைவியார் ஜாக்லின் தென்னரசு உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார்.

மதுரையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி, பின் அவரது மகள்கள் தமயந்தி அருணாசலம், யாமினி சோமசுந்தரம் மற்றும் குடும்பத்தாருக்கு அமைச்சர் பெருமக்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரிய கருப்பன், பி.மூர்த்தி, முன்னாள் கழக துணைப் பொதுச் செயலாளர் மொடக்குறிச்சி சுப்பு லட்சுமி, தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., முன்னால் ஐஜி சந்திரசேகரன், மாவட்ட செயலாளர் முத்துராமலிங்கம் காதர் பாஷா எம்.எல்.ஏ., வ. வேலுசாமி, பெ.குழந்தை வேலு, இளவரசி, நாம கோடி நாராயணன் உள்ளிட்டோர் நேரில் அஞ்சலி செலுத்தி னார்கள்.

மேலும் பூமிநாதன் எம்.எல்.ஏ, கழக நிர்வாகிகள் அக்ரி கணேசன், மாவட்டத் துணைச் செயலாளர் சேங்கைமாறன், எஸ் எஸ்.டி.வல்லபாய், ரவீந்திரன், புண்ணியமூர்த்தி, அறிவு நிதி, ராஜேஷ் கண்ணா, கருப்பு, முத்து, மகேந்திரன், எஸ்.எஸ்.அருணாச்சலம், ருக்மணி காதர் பாஷா வெள்ளைச்சாமி, மகாத்மா பள்ளி தாளாளர் பி.பன்னீர்செல்வம், கண்ணதாசன், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் மணி செல்வம், ஜெய ஆனந்தன், ஏ. ஆர்.சி. மனோகரன், அமைச்சர் உதவியாளர் பாலகுரு, சொக்கலிங்கம், சிந்து, வக்கீல் வினோத், டாக்டர்.சிவரஞ்சனி,சீனி முருகன், கார்த்தி, நடராஜன் மற்றும் மதுரை மாவட்ட கழக நிர்வாகிகள், சிவகங்கை மாவட்ட கழக நிர்வாகிகள் திரளான கழகத்தினர், பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

### இத்தாலி நாட்டில் நடைபெறும் உலக அளவில ஸ்கேட்டிங் போட்டி!

# தஞ்சை வடக்கு - மாவட்டம் - கும்பகோணம் பள்ளி மாணவன் தேர்வு!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வாழ்த்து!

தஞ்சாவூர். செப்.19-

ரோலர் ஸ்கேட்டிங் பெடரேசன் ஆப் இந்தியா அமைப்பின் மூலம் பயிற்சி பெற்று பல மாநிலங்கள் மற்றும் தேசிய அளவிலான ஸ்கேட்டிங் போட்டிகளில் பங்கு பெற்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்கள் மேற்படி அமைப்பின் மூலம் ஜோத்பூர் மாநிலத்தில் நடைபெற்ற இத்தாலி நாட்டில் நடக்கும் போட்டிக்கான தேர்வு மற்றும் நேர்காணலில் பல மாநிலங்களில் இருந்து வீரர்கள் கலந்து கொண்டதில் நமது மாநிலத்தின் சார்பாக சென்ற விளையாட்டு வீரர்களில் ஐந்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் வேல்ட் சாம்பியன்ஸ்ஷிப் 2024 தேர்வாகி உள்ளனர்.

இப்போட்டியில் பங்கு பெற கும்பகோணம் பள்ளி மாணவன் விஸ்வரூபன் செந்தில்குமார் தேர்வாகி உள்ளார், இவர் கும்பகோணம் தாராசுரம் பகுதியில் வசித்து வரும் இவர் சோழன் மாளிகை ஜி எஸ் கே சிபிஎஸ்இ பள்ளியில் பிளஸ் டூ படித்து வருகிறார் மாணவன் விஸ்வரூபன் தனது ஐந்தாவது வயது முதல் தனது பயிற்சியை தஞ்சாவூர் பகுதியில் பயிற்சி அளித்து வரும் தமிழ்நாடு ஸ்கேட்டிங் மாநில பொருளாளர் டி.என்.ஆர்.எஸ்.ஏ. ராஜூ மற்றும் அவரது குழுவினர் ஜோஸ் .அரவிந்த் ஆகியோரிடம் பயிற்சி மேற்கொண்டு மாவட்ட மாநில மண்டல தேசிய அளவில் பல போட்டிகளில் கலந்து கொண்டுள்ளதுடன் பல பதக்கங்கள் பெற்று தற்போது இத்தாலியை நாட்டில் நடைபெறும் ஸ்கேட்டிங் போட்டியில் கலந்து கொள்ள தேர்வாகியுள்ளார்.

மாணவனை தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் பாராட்டி விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார். அவரிடம் தான் தற்போது தஞ்சாவூர் மாநகரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட உள்விளையாட்டு அரங்கில் பயிற்சி பெற்றதால் இந்த நிலைக்கு உயர்ந்துள்ளதாவும் எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் தன்னை போல் கும்ப கோணம் பகுதியில் இருந்து பல மாணவர்கள் தஞ்சாவூர் சென்று பயிற்சி செய்வதாகவும் அதற்கு சென்று வர மூன்று மணிநேரம் பயணம் செய்ய வேண்டி உள்ளதாகவும் எனவே சட்டமன்றத் தில் அறிவிக்கப் பட்ட முதலமைச்சர் சிறு விளை யாட்டு அரங்கம் கும்பகோணத்தில் அமைக்கும் போது ஸ்கேட்டிங் உள்விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமென தமிழக அரசுக்கு ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்கள் சார்பில் கோரிக்கை மனு அளித்தார்.

# புதுச்சேரியில் இந்தியா கூட்டணி சார்பில் பந்த் - போராட்டம்!

## பேருந்துகள், ஆட்டோ, டெம்போக்கள் ஓடவில்லை!

புதுச்சேரி, செப்.19

நாடு முழுவதும் உள்ள யூனியன் பிரதேசங்களுக்கு மின் கட்டணத்தை இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கிறது. ஆண்டுதோறும் மின்துறையின் வரவு, செலவு திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறையை சரிக்கட்டும் வகையில் மின் கட்டணம் உயர்த்தப்படும். புதுவையில் கடந்த 5 ஆண்டாக தொடர்ந்து மின் கட்டணம் உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டிலும் புதுவை அரசின் மின்துறை ஒழுங்குமுறை ஆணையத்திடம் வரவு, செலவு அறிக்கை தாக்கல் செய்து, சுமார் ரூ.120 கோடி பற்றாக்குறையை சரிக்கட்ட மின் கட்டணத்தை உயர்த்த அனுமதி கோரியது.

இதன்பேரில் இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டணத்தை உயர்த்த அனுமதி அளித்தது. வழக்கமாக ஆண்டுதோறும் ஏப்ரல் 1ந் தேதி முதல் மின் கட்டணம் உயர்த்தப்படும். இந்த ஆண்டு பாராளுமன்ற தேர்தல் குறுக்கிட்ட தாலும், அரசியல் கட்சிகளின் எதிர்ப்பாலும் அறிவிக்கப்பட்ட மின் கட்டணம் அமல்படுத்தப்படாமல், நிறுத்தி வைக்கப்பட்டது.

தேர்தலுக்கு பிறகு ஜூன் 16ந் தேதி முன்தேதியிட்டு மின் கட்டண உயர்வு அமலுக்கு வரும் என அரசு அறிவித்தது. இதற்கு அரசியல் கட்சியினர், சமூக அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்தனர். இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் மின் கட்டண உயர்வை திரும்பப் பெறக் கோரி ஊர்வலம் நடந்தது. இதைத்தொடர்ந்து முதல் 200 யூனிட்க ளுக்கு ரூ.85 பைசா அரசு மானியம் வழங்குவதாக அறிவித்தது. ஆனாலும் மின் கட்டண உயர்வை முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தின. சட்டப்படி மின்கட்டணம் உயர்த்தப் பட்டுள்ளது என்றும், இதை மாற்றும் அதிகாரம் புதுவை அரசுக்கு இல்லை என்றும் அரசு தரப்பில் விளக்கம் தரப்பட்டது.

இந்த விளக்கத்தை ஏற்க மறுத்த எதிர்க்கட்சிகள் மின் கட்டண உயர்வை ரத்து செய்யக்கோரி இன்று மாநிலம் தழுவிய பந்த் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன. பந்த் போராட்டத்துக்கு ஆதரவு தரும்படி இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் வணிக நிறுவனங்கள், வியாபாரிகள், பஸ், டெம்போ, ஆட்டோ உரிமையாளர்கள், மார்க்கெட் வியாபாரிகளை சந்தித்து ஆதரவு திரட்டினர்.

இதன்படி நேற்று காலை 6 மணிக்கு பந்த் போராட்டம் தொடங்கியது. பந்த் போராட்டத்தையொட்டி அதிகாலை முதல் புதுவையில் தனியார் பஸ்கள் முற்றிலுமாக ஓடவில்லை. புதுவையை பொறுத்தவரை தனியார் பஸ்களே அதிகம் என்பதால், பஸ் போக்குவரத்து முடங்கியது. இதனால் பஸ் பயணிகள் கடும் அவதிக்கு ஆளாகினர். பெரும்பாலான டெம்போ, ஆட்டோக்கள் ஓடவில்லை. இருப்பினும் ஒரு சில ஆட்டோ, டெம்போக்கள் ஓடியது. கல்லூரி பஸ்கள் வழக்கம்போல இயக்கப்பட்டது. மாணவர்கள் வழக்கம்போல கல்லூரிகளுக்கு சென்றனர்.

புதுவையிலிருந்து இயங்கும் தமிழக அரசு பஸ்கள் இயக்கப்படவில்லை. புதுவை வழியாக செல்லும் தமிழக அரசு பஸ்கள் மாநில எல்லைகளான கன்னியகோவில், கோரிமேடு, கனகசெட்டிகுளம் பகுதியில் பஸ்களை நிறுத்தி பயணிகளை இறக்கினர். ஒரு சில தமிழக அரசு பஸ்கள் மட்டும் புதுவை வந்து சென்றது. பஸ்கள் இயக்கப்படாததால் புதுவை தற்காலிக பஸ் நிலையம் வெறிச்சோடி கிடந்தது. புதுவை அரசு பஸ்கள் ஒரு சில இயக்கப்பட்டது. இதில் பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது. இந்த பஸ்களில் பயணிகள் ஏறி மாநில எல்லைக்கு சென்று வெளியூர் சென்றனர்.

பந்த் போராட்டத்தால் மாணவர்கள் பள்ளிக்கு செல்வதில் சிரமம் ஏற்படும் என்பதால், அரசே ஒன்று முதல் 8ம் வகுப்பு வரை விடுமுறை அறிவித்தது. அதேநேரத்தில் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை வழக்கம்போல பள்ளிகள் இயங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மாணவர்கள் பேருந்துகள் இயக்கப்படவில்லை. இதனால் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தது. நகரத்தின் பிரதான வீதிகளில் வணிக நிறுவனங்கள், கடைகள் முழுமையாக அடைக்கப்பட்டி ருந்தது. புறநகர், கிராமப் புறங்களிலும் இதே நிலை நீடித்தது.

தியேட்டர்களில் பகல் காட்சிகள் ரத்து செய்யப்பட்டிருந்தது. கடலூர் சாலையில் வணிக வளாகம் திறக்கப்படவில்லை. தட்டாஞ்சாவடி, மேட்டுப்பாளையம், சேதராப்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தொழிற்பேட்டைகளில் தொழிற்சாலைகள் இயங்கவில்லை. பெரிய மார்க்கெட் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறிய மார்க்கெட்டுகள் இயங்கவில்லை. ஒட்டுமொத்த மாக பந்த் போராட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பந்த் போராட்டத்தையொட்டி நகரம் முழுவதும் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை:

# பல்லவபுரம் வடக்குப் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – நிர்வாகிகள் பங்கேற்பு!

பல்லவபுரம், செப்.18-

2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள பல்லாவரம் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (19.09.2024, வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு பல்லாவரம் துரைப்பாக்கம் 200 அடி சாலையில் உள்ள வெங்கடேஷ் மஹாலில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மண்டலத் தலைவர் - தாம்பரம் மாநகராட்சி - பகுதிக் கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமை தாங்கு கிறார்.

பகுதிக் கழக அவைத் தலைவர் இரா.சேகர் வரவேற்புரையாற்றுகிறார்.

பகுதிக் கழக துணைச் செயலாளர்கள் ச.சிவக்குமார், வ.முத்து, பி.அம்பிகா, பகுதிக் கழகப் பொருளாளர் எஸ்.நெடுஞ்செழியன், மாநகர பிரதிநிதிகள் எம்.இளங்கோ, மீசை கே. ராதா, ஐ.கஜேந்திரன், செ. கன்னியப்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் - காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் - தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் - மாநகர துணை செயலாளர் க. வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் - மாநகர அவைத் தலைவர் - கோ.காமராஜ், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ். கே.இப்ராகிம்,

பல்லாவரம் தெற்குப் பகுதிக் கழக செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், செம்பாக்கம் வடக்குப் பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் ந. நவீன், தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் மு.ரஞ்சன், காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு. டி. பிரகாஷ், காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன்,

மாவட்ட பிரதிநிதிகள் மு.நாகலிங்கம், க.ரமேஷ், த.ராஜாராமன், கே.தனசேகரன், காஞ்சி வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நல துணை அமைப்பாளர் வே.தாமோதரன், காஞ்சி வடக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் மா.சந்திரகேசவன், எம்.ஐ.டி. எஸ்.விஜய், ப.ராஜா, ஜெ.இன்சமாம், என்.எஸ்.மதன கோபால், வீடியோ பி.ஹரி, டபிள்யூ ஜூலியன் அதிசயராஜ், எஸ்.ஹரி, ஜெ. பிரசன்னா, ஜி.நரேஷ்பாபு, எம்.பிரகாஷ், ஐ.டில்லிபாபு, எம். இளவரசன், எம்.கமல்ராஜ், ஏ.அசோக்குமார், ஒய்.பதருனிஷா,

பல்லாவரம் வடக்குப் பகுதி வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் தே.இளங்கோவன், பி.பரமசிவம், பி.ராஜ்குமார், டி.வி.ராஜா எம்.சி., எம்.அந்தோணி, டி.எச். பிரான்சிஸ்பால், கோ.ரங்கநாதன், லதா சிவக்குமார் எம்.சி., ரேணுகாதேவி பரமசிவம் எம்.சி., மங்கையர் திலகம் ராஜ்குமார் எம்.சி., பிரேமலதா பண்டேரிநாதன் எம்.சி.

பல்லாவரம் தெற்குப் பகுதி வட்டக் கழக செயலாளர்கள் வி.என்.சிலம்பரசன், எம்.முருகையன், பி. வெங்கடேசன், ஆர். கே.நாகராஜ், எஸ்.முஜிபுர் ரகுமான், டி.கன்னியப்பன், ஆர்.காமேஷ் ரங்கநாதன் மற்றும் பல்லாவரம் வடக்குப் பகுதிக் கழக பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி பேருந்து நிலையம் முன்பு தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்தநாள் விழாவையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், செயற்குழு உறுப்பினர் ஆசையன்,இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம்,பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரியில் உயர்த்தப்பட்ட மின்சாரத்தை திரும்ப பெற வலியுறுத்தி இந்தியா கூட்டணி சார்பில் புதுச்சேரியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.